Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 சென்னை | தினசரி | 4 பக்கம் புதன்கிழமை, அக்டோபர் 12, 2022 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 90

# வாசிப்புப் பழக்கத்துக்காக பள்ளி மாணவர்களுக்கான 'ஊஞ்சல்', 'தேன்சிட்டு' இதழ்கள்: முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்



சென்னை, அக்டோபர் 12 2022: முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று (12-ந் தேதி) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான 'ஊஞ்சல்' என்ற இதழையும், ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கான 'தேன்சிட்டு' என்கிற இதழையும், ஆசிரியர்களுக்கான 'கனவு ஆசிரியர்' என்ற இதழையும் வெளியிட்டார். பாரதி இளங்கவிஞர் விருதினை ஒரு மாணவ, மாணவியருக்கு வழங்கினார்.

குழந்தைகளின் அறிவுக்கண்களைத் திறப்பது வாசிப்புப் பழக்கம். ஏட்டுக்கல்வி மட்டுமின்றி இவ்வுலகை அறிந்து கொள்ளவும் சமூகம் குறித்த புரிதலை மாணவர்களிடையே உருவாக்கவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கென பருவ இதழ்களை பள்ளிக்கல்வித்துறை தொடங்கியுள்ளது.

அதன்படி, நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 'ஊஞ்சல்' என்கிற இதழும், ஆறாம் வகுப்பிலிருந்து ஒன்பதாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 'தேன்சிட்டு' என்கிற இதழும் மாதமிருமுறை இதழாக வெளியிடப்படுகிறது. குழந்தைகளின் ஆக்கங்களோடு, அவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய தகவல்கள், செய்திகள், சுவையான கதைகள் போன்றவை இவ்விதழ்களில் வெளியிடப்படும்.

இவைமட்டுமல்லாமல், ஆசிரியர்களுக்கென தனியே 'கனவு ஆசிரியர்' என்கிற மாதாந்திர இதழும் வெளியிடப்படுகிறது. ஆசிரியர்களின் படைப்புகளோடும் வகுப்பறை அனுபவங்களோடும் அவர்களுக்கான சிறப்புக் கட்டுரைகளோடும் 'கனவு ஆசிரியர்' இதழ் வெளியாகவிருக்கிறது.

'ஊஞ்சல்', 'தேன்சிட்டு', 'கனவுஆசிரியர்' ஆகிய மூன்று இதழ்களை முதலமைச்சர் வெளியிட பள்ளிக் குழந்தைகளும், ஆசிரியர்களும் இதழ்களைப் பெற்றுக்கொண்டனர்.

மகாகவி பாரதியார் மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமையைப் போற்றும் வகையில் முதலமைச்சர் 10.9.2021 அன்று வெளியிட்ட பல்வேறு அறிவிப்புகளில், மகாகவி பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11-ம் நாள், அரசின் சார்பில் இனி ஆண்டுதோறும் 'மகாகவி நாளாகக்' கடைப்பிடிக்கப்படும் என்றும், இதனையொட்டி, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மாநில அளவில் கவிதைப் போட்டி நடத்தி 'பாரதி இளங்கவிஞர் விருது' மாணவன் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன் வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

அதன்படி, மகாகவி பாரதியார் நினைவு தின கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற சேலம், அம்மாபேட்டை நகரவை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர் பா. பிரவீன் மற்றும் தூத்துக்குடி திருச்சிலுவை பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி ர. சைனி ஆகியோருக்கு முதலமைச்சர், பாரதி இளங்கவிஞர் விருதிற்கான தலா ஒரு லட்சம் ரூபாய் பரிசுத் தொகையை வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் லியோனி, தலைமைச் செயலாளர் வெ. இறையன்பு, பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, பள்ளிக் கல்வி ஆணையர் க.நந்தகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தெலங்கானா ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜனை ஹைதராபாதில் உள்ள ஆளுநர் மாளிகையில் மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் சந்தித்தார்



சென்னை, அக்டோபர் 12 2022: மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் (தனிப்பொறுப்பு), பிரதமர் அலுவலகம், விண்வெளி, அணுசக்தித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், தெலங்கானா ஆளுநரும், புதுச்சேரி துணை நிலை ஆளுநருமான டாக்டர் தமிழிசை சவுந்தரராஜனை ஹைதராபாதில் உள்ள ஆளுநர் மாளிகையில் சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது, தெலங்கானா மாநிலத்தில் பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கப்பட்ட பல்வேறு மத்திய திட்டங்கள் பற்றிய நிலைமை குறித்து, இருவரும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டனர். மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் குறிப்பாக மாணவிகள் இடையே அறிவியல், தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்புக்கான வழிமுறைகள் பற்றியும் அமைச்சர் விவாதித்தார்.

அறிவியல் ஆராய்ச்சியில் கூடுதலாக மாணவிகளை ஊக்கப்படுத்துவதன் அவசியம் பற்றி ஹைதராபாதில் நடைபெற்ற சிஎஸ்ஐஆர்-ஐஐசிடி சார்பிலான மாநாட்டில், டாக்டர் சவுந்தரராஜன் தமது உரையில் வலியுறுத்தியதை டாக்டர் ஜிதேந்திர சிங் பாராட்டினார். பெண் குழந்தைகளுக்கு அதிகாரமளிக்க சிஎஸ்ஐஆர் மையமும், அறிவியல் தொழில்நுட்ப அமைச்சகமும் அனைத்து உதவிகளையும் செய்யும் என்று அமைச்சர் உறுதியளித்தார்.

தென்மாநிலங்களில் குறிப்பாக ஹைதராபாத், பெங்களூரு ஆகிய முன்னணி மையங்களில் இந்திய பொருளாதாரத்தை முன்னோக்கி செலுத்துவதற்கும் பெருமளவு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் புத்தொழில்களில் பங்களிப்பு குறித்து டாக்டர் ஜிதேந்திர சிங் விவாதித்தார்.

ஆளுநர் மாளிகைக்கு அளிக்கப்பட்டுள்ள தனி அதிகாரம் உள்ள நிதியை கொண்டு உதவி தேவைப்படும் நபர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஆளுநர் மாளிகையில் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் நடத்தும் பிரஜா தர்பார் திட்டத்தை டாக்டர் ஜிதேந்திர சிங் பாராட்டின.

# தமிழ்நாட்டில் 4 நாட்களுக்கு மழை நீடிக்கும்: வானிலை ஆய்வு மையம்

சென்னை, அக்டோபர் 12 2022: தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குமரிக்கடல் பகுதிகளில் நிலவும் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்றும் நாளையும் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, விருதுநகர், மதுரை, கரூர், ஈரோடு, நாமக்கல், சேலம், திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது என தெரிவித்துள்ளது.

14 ந்தேதி தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, கரூர், ஈரோடு, நாமக்கல், சேலம், திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, பெரம்பலூர், அரியலூர், கடலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, வேலூர், திருப்பத்தூர் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

15 ந்தேதி தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, விருதுநகர், கரூர், ஈரோடு, நாமக்கல், சேலம், திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, பெரம்பலூர், அரியலூர், கடலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது என தெரிவித்துள்ளது.

16 ந்தேதி தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, கரூர், நாமக்கல், சேலம், திருச்சிராப்பள்ளி, தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# சோனியா காந்தி என்னை பரிந்துரைக்கவில்லை: மல்லிகார்ஜூன கார்கே விளக்கம்

## தொண்டர்கள் வலியுறுத்தியதால்தான் காங்கிரஸ் தலைவர் தேர்தலில் போட்டி



சென்னை, அக்டோபர் 12 2022: காங்கிரஸ் தலைவர் தேர்தலில் போட்டியிட சோனியா காந்தி என்னை பரிந்துரைக்கவில்லை என்றும் அவர் எனக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறுவது பொய் மற்றும் வதந்தி என்றும் கட்சியின் மூத்த தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலில் அக்கட்சியைச் சேர்ந்த மல்லிகார்ஜுன கார்கேவும் சசி தரூரும் போட்டியிடுகின்றனர். முன்னதாக ராஜஸ்தான் அரசியலில் குழப்பம் ஏற்பட்டதையடுத்து அசோக் கெலாட் போட்டியிலிருந்து விலகினார். இதில், கடைசி நேரத்தில்தான் மல்லிகார்ஜுன கார்கே போட்டியிடுவதாக அறிவித்து வேட்புமனு தாக்கல் செய்தார்.

இதனைத் தொடர்ந்து, கட்சியை வழிநடத்த சோனியா காந்தி கூறியதாக ஊடகங்களில் தகவல் வெளியானது. இந்நிலையில் இதுகுறித்து பதில் அளித்துள்ள மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் தலைவர் பதவிக்கு சோனியா காந்தி தன்னுடைய பெயரை ஒருபோதும் பரிந்துரைக்கவில்லை என்றும் தனக்கு ஆதரவு தெரிவிப்பதாக வரும் செய்தியும் உண்மையில்லை, அது வெறும் வதந்தி என்றும் தெரிவித்தார்.

'மேலும், காந்தி குடும்பத்தைச் சேர்ந்த யாரும் தேர்தலில் பங்கேற்க மாட்டார்கள், எந்த வேட்பாளரையும் ஆதரிக்க மாட்டார்கள் என்று சோனியா காந்தி ஏற்கெனவே தெளிவாகக் கூறியுள்ளார். காங்கிரஸ் கட்சியையும், சோனியா காந்தியையும், என்னையும் இழிவுபடுத்துவதற்காக யாரோ இந்த வதந்தியை பரப்பியுள்ளனர்.

தொண்டர்கள் சிலர் என்னை போட்டியிட வற்புறுத்தினார்கள். மேலும், நாட்டின் நிலைமை மோசமாக உள்ளது. மோடியும் அமித் ஷாவும் ஜனநாயகத்திற்கு எதிராக அரசியல் செய்கிறார்கள். சிபிஐ, அமலாக்கத் துறை போன்ற அமைப்புகள் பலவீனமடைந்து வருகின்றன. அவர்களை எதிர்த்துப் போராட எனக்கு அதிகாரம் வேண்டும். அதனால்தான், பிரதிநிதிகளின் பரிந்துரையை ஏற்று நான் தேர்தலில் போட்டியிடுகிறேன்' என்று கூறியுள்ளார்.

# பிரதமரின் வீடு வழங்கும் திட்டத்தில் சாலையோர வியாபாரிகளை இணைக்க நடவடிக்கை: மத்திய இணையமைச்சர் தகவல்




சென்னை, அக்டோபர் 12 2022: மதுரை மாவட்டத்தில் மத்திய அரசு திட்டங்கள் குறித்து மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான இணை அமைச்சர் திரு. கௌஷல் கிஷோர் இன்று ஆய்வு மேற்கொண்டார். இந்த கூட்டத்தில் மதுரை மாவட்ட ஆட்சியர் அனீஷ் சேகர், மாநகராட்சி ஆணையாளர் சிம்ரன் ஜித் சிங் மற்றும் துறை சார்ந்த உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அப்போது மதுரை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய அரசின் திட்டங்கள் குறித்தும், பயனாளிகள் விவரங்கள், ஒதுக்கப்பட்டுள்ள நிதி, நடைபெற்று வரும் திட்ட பணிகள் ஆகியவை குறித்து விரிவாக கேட்டறிந்தார்.

மேலும், திட்ட பயனாளிகளை நேரில் சந்தித்த மத்திய இணை வாழ்வாதாரம், தொழில் அமைச்சர், அவர்களது வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் ஆகியவை குறித்து கேட்டறிந்தார்.

தொடர்ந்து கூட்டத்தில் பேசிய மத்திய இணை அமைச்சர், பிரதமரின் வீடு வழங்கும் திட்டம் மற்றும் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வீடுகள் திட்டத்தில் சாலையோர வியாபாரிகள் போன்ற ஏழை மக்கள் இந்த திட்டத்தில் இணைக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# தேவி பிரசாத் இசையில் "ஓ பெண்ணே" பாடலை உலகநாயகன் கமல்ஹாசன் வெளியிட்டார்!!!




சென்னை, அக்டோபர் 12 2022: டி சீரிஸ் சார்பில் பூஷன் குமார் தயாரிப்பில் இசையமைப்பாளர் தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்து, பாடல் வரிகள் எழுதி, பாடி, நடனம் அமைத்து, நடித்து, இயக்கி இருக்கும் "ஓ பெண்ணே" பாடல் வெளியீட்டு விழா இன்று பத்திரிகை, ஊடக நண்பர்கள் முன்னிலையில் அரங்கேறியது. தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரமான உலகநாயகன் கமல்ஹாசன் இப்பாடலை வெளியிட்டார். இந்த பாடல் ஒரு பான்-இந்திய பாப் பாடலாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாடலின் தமிழ் பதிப்பை இன்று கமல்ஹாசன் வெளியிட்டார். இந்த பாடலின் ஹிந்தி பதிப்பை ரன்வீர் சிங் முன்னரே வெளியிட்டு இருந்தார். இந்த பாடலின் தெலுங்கு பதிப்பு திரு நாகார்ஜுனாவால் இன்று மாலை வெளியாக இருக்கிறது. வெளியீட்டு விழாவினில்...

இசையமைப்பாளர் தேவி ஸ்ரீ பிரசாத் கூறியதாவது...

"கமல் சாருக்கு எனது அன்புகளும் நன்றிகளும். நான் எந்த பணியை மேற்கொண்டாலும் அவர் எனக்கு உறுதுணையாகவும், உத்வேகம் கொடுக்க கூடியவராக எப்போதும் இருக்கிறார். இந்த சர்வதேச பாடல் உடைய ஐடியாவை முதன் முதலில் அவரிடம் தான் கூறினேன். அவருடைய உத்வேகம் தான் நான் இந்த பாடலை முடிக்க காரணமாக இருந்தது. அவருக்கு இசையின் மேல் இருக்கும் பிரியம் தான், என்னையும் அவரையும் ஒன்றிணைத்தது. அதனால் தான் அவர் இதை வெளியிட வேண்டும் என்று விரும்பினேன். சுயாதீன கலைஞர்கள் வெளியே வர வேண்டும் என்பதற்காக தான் கொரோனா காலத்தில் ராக்ஸ்டார் என்ற நிகழ்வை நடத்தினேன். இந்த பாடலின் நோக்கமே சுயாதீன கலைஞர்கள் எல்லா மொழிகளிலும் தங்கள் திறமையை காட்ட வேண்டும் என்பது தான். இனிமேல் வரும் சுயாதீனகலைஞர்களும் பல மொழிகளில் தங்கள் பாடல்களை உருவாக்க வேண்டும். பல மொழிகளை கற்றுகொண்டு, பல மொழிகளில் இசையமைக்க வேண்டும். இந்த பான் இந்தியன் பாப் ஆல்பத்திற்கு உங்கள் ஆதரவு தேவை. சமீபத்தில் ஹிந்தியில் இந்த பாடல் வெளியானது, அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. டி சீரிஸ்-க்கு இந்த நேரத்தில் நன்றி கூறிக்கொள்கிறேன். பூஷன் குமார் அவர்களுக்கும் எனது நன்றிகள். உங்களது அன்பும் ஆதரவும் எங்களுக்கு தேவை. அனைவருக்கும் நன்றி.

நடிகர் கமல்ஹாசன் கூறியதாவது...

"தேவிஸ்ரீபிரசாத்தை எனக்கு பல நாட்களாக தெரியும். இவர் என்னை அதிகமாக வியக்க வைத்துக்கொண்டே இருக்கிறார். பல சாதனைகள் படைத்து அடுத்து அடுத்து என உத்வேகமாக நகர்ந்து கொண்டே இருக்கிறார், அது சிறந்த இசை கலைஞர்களுக்கே உண்டான சிறப்பம்சம். இவருக்கு வெற்றி கண்டிப்பாக வந்தே தீர வேண்டும், இவருக்கு வெற்றி தாமதாகிறது என்ணி நான் வருத்தப்பட்டு இருக்கிறேன். இவருக்கு உங்களது ஆதரவு கண்டிப்பாக தேவை. திரை இசை பாடல்களை தாண்டி, சுயாதீன பாடல்கள் நிறைய வர வேண்டும், இசை கலைஞர்கள் அதை செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. திரை இசை அவர்களுக்கு ஒரு கட்டுப்பாடு தான், சுயாதீன பாடல்கள் தான் இசை கலைஞர்கள் தங்களுடைய முழு திறமையும் வெளிகாட்ட ஒரு பாதையாக இருக்கும். மற்ற நாடுகளில் திரை பிரபலங்களை விட சுயாதீன கலைஞர்கள் பிரபலமாகி இருக்கிறார்கள். திரைப்படங்களை விட மிகபெரிய துறையாக இசை துறை வளர வேண்டும், அதற்கு உண்டான தகுதி அதில் இருக்கிறது. அதனால் அதற்கு உங்கள் அனைவரது ஆதரவு தேவை. பழைய காலத்தில் இது அதிகமாக இருந்தது, இப்போதும் மீண்டும் அது வர வேண்டும். தேவிஸ்ரீபிரசாத் உடைய இந்த பாடல் பெரும் வெற்றி பெற வேண்டும், தமிழ் சினிமாவிலும் இவர் மிகப்பெரிய வெற்றியை பதிவு செய்ய வேண்டும். இந்த பாடலுக்கு உறுதுணையாக இருந்த பூஷன் குமாருக்கு நன்றி. இந்த பாடலுக்கு உங்கள் ஆதரவை தாருங்கள் நன்றி."

# அமிதாப் பச்சனின் பிறந்தநாள் அன்று பொன்குமரன் இயக்கும் "மஹால்" திகில் படத்தில் நடிப்பது பற்றிய அறிவிப்பு - பிரபல பாலிவுட் நடிகர் ஜாவித் கான்



சென்னை, அக்டோபர் 12 2022: பாலிவுட் சூப்பர் ஸ்டார் அமிதாப் பச்சனின் பிறந்தநாளை நடிகர் ஜாவித் கான் விமரிசையாக கொண்டாடினார். அமிதாப் பச்சனுடனான தன்னுடைய நட்பை பற்றி பகிர்ந்துகொண்ட ஜாவித் கான் கூறுகையில்: அமிதாப் பச்சன் அவர்களை பற்றிய எனது ஆரம்பகால நினைவு 80களில் இருந்து துவங்கும். 'ஒன்லி விமல்' பிரச்சாரம் மூலம் நான் நாட்டின் தலைசிறந்த மாடலாக இருந்தபோதிலும், புனேவில் உள்ள இந்திய திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில் இருந்து எனது நடிப்பு வாழ்க்கையைத் தொடங்கினேன்.

ஒரு நாள் அதிகாலையில் அப்ராதி கோன் இரவுப் படப்பிடிப்பை முடித்துவிட்டு மும்பை ஃபிலிம்சிட்டியில் உள்ள மேக்கப் அறைக்கு வந்திருந்தேன். அப்போது அங்கே அமர்ந்திருந்தவரை பார்த்து நான் உறைந்து போனேன், ஏனென்றால் மேக்கப் ஏரியாவின் புல்வெளியில் அமர்ந்திருந்தது அமிதாப் பச்சன். அவரை கண்டதும் நான் பல்வேறு சிந்தனைகளில் தொலைந்து போனேன். ஆனால் அவரோ நாற்காலியில் இருந்து நின்று ஒரு அன்பான வணக்கம் சொல்லிவிட்டு கை குலுக்குவதற்காக அவரது கரம் நீட்டினார். அதன் பிறகு என்ன நடந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை, ஆனால் அன்று முழுவதும் நான் மயக்கத்தில் இருந்தது மட்டும் தெரியும். அப்பேற்பட்ட மாமனிதருக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துகள். வாழ்க நீங்கள் பல்லாயிரம் ஆண்டு. திரைத்துறையில் முன்னேறி, பேய் படங்களில் பிரபலம் ஆன பிறகு, புகழ்பெற்ற 'இந்தியா டுடே' இதழ் வழங்கிய 'திகில் படங்களின் அமிதாப் பச்சன்' என்கிற பட்டத்தை நான் மிக பெரிய கௌரவமாக கருதுகிறேன். நடிப்பிலிருந்து சிறிது காலம் ஓய்வு எடுத்த நான், 'மஹால்' என்னும் தமிழ் மொழி திகில் படத்தில் இப்போது நடித்து வருகிறேன். 'மஹால்' படத்தை விருது பெற்ற இயக்குநர் பொன்குமரன் இயக்கியுள்ளார் மற்றும் நரேஷ் ஜெயின் தயாரித்துள்ளார்.

வேதிகா, திகங்கா மற்றும் சிஎஸ் கிஷனுடன் ஒரு நட்சத்திர பட்டாளமே இப்படத்தில் உள்ளது. தற்போது 'பான் இந்தியா' என்று ஆகிவிட்ட நிலையில், தென்னிந்திய தயாரிப்பாளர்களுடன் இணைந்து பணியாற்ற ஆவலுடன் காத்திருக்கிறேன்.

# இந்திய சினிமா வரலாற்றில் முதன் முறையாக ரசிகர்கள் கையால் வெளியிட்ட பாடல் இணையதளத்தில் 11லட்சம் பார்வையாளர்களை கடந்து பரபரப்பாக 2 மில்லியனை நோக்கி நகர்கிறது

சென்னை, அக்டோபர் 12 2022: கோயம்புத்தூர் எஸ் பி மோகன் ராஜ் மற்றும் ஜி மீடியா ஜெயஸ்ரீ விஜய் தயாரிப்பில், 'பவுடர்' படத்தை இயக்கி வரும் விஜய் ஸ்ரீஜி இயக்கத்தில் உருவாகும், 'வெள்ளி விழா நாயகன்' மோகன் நடிக்கும் 'ஹரா' படத்தின் முதல் பாடல் கயா முயா வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

மோகன் சினிமாவிற்கு வந்து 45 ஆண்டுகள் ஆனதையொட்டி சென்னை தியாகராய நகரில் அவரது ரசிகர்கள் ஏற்பாடு செய்த விழாவில் ஹரா படத்தின் முதல் பாடல் வெளியிடப்பட்டது. இவ்விழாவை ஹரா படக்குழு இணைந்து நடத்தியது. இந்திய சினிமா வரலாற்றில் ரசிகர்கள் கையால் பாடலை வெளியிட்டது இதுவே முதல் முறை என்று படக்குழுவினர் தெரிவிக்கிறார்கள்.

நேற்று முன்தினம் வெளியாகி 13 லட்சம் பார்வைகளை கடந்து பாடல் மிகப் பெரிய வெற்றி பெற்றுள்ளது. இதனால் மோகன் ரசிகர்கள், சினிமா ரசிகர்கள் மற்றும் படக்குழுவினர் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள். விரைவில் வெளிவரவிருக்கும் 'பவுடர்' படத்தின் கதையின் நாயகனும் மக்கள் தொடர்பாளருமான நிகில் முருகன் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார். தேசிய விருது பெற்ற இயக்குநர் சீனு ராமசாமி, இயக்குநர் விஜய் ஸ்ரீஜி, இசை அமைப்பாளர் லியாண்டர் லீ மார்ட்டி, மற்றும் மோகன் ரசிகர் மன்றத்தின் முக்கிய நிர்வாகி கருணாகரன் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

ஹரா திரைப்படம் விரைவில் திரைக்கு வர தொழில்நுட்ப பணிகள் நடைபெற்று வருகிறது என்று படத்தின் தயாரிப்பாளர் கோவை எஸ் பி மோகன் ராஜ் தெரிவித்தார். ஹரா படத்தில் குஷ்பு, மொட்டை ராஜேந்திரன், சிங்கம்புலி, தீபா, மைம் கோபி, சாருஹாசன், மனோபாலா, ஜெயக்குமார் மற்றும் ஏராளமான நடிகர்கள் நடிக்க, மிகுந்த பொருட்செலவில் உருவாக்கப்பட்டு வருகிறது. பள்ளியில் படிக்கும் போதிலிருந்தே முதலுதவி, குட் டச், பேட் டச் உள்ளிட்டவற்றை குழந்தைகளுக்கு சொல்லித் தருவது போல, ஐபிசி சட்டங்களையும் அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதே ஹரா படத்தின் முக்கிய கருத்தாகும்.

லியாண்டர் லீ மார்ட்டி ஹரா படத்திற்கு இசையமைக்கிறார் படத்தின் மக்கள் தொடர்பு பணிகளை நிகில் முருகன் கவனிக்கிறார்.



விஜய் ஸ்ரீ ஜி இயக்கத்தில், கோயம்புத்தூர் எஸ் பி மோகன் ராஜ் மற்றும் ஜி மீடியா ஜெயஸ்ரீ விஜய் தயாரிப்பில், உருவாகும் 'வெள்ளி விழா நாயகன்' மோகன் நடிக்கும் 'ஹரா' படத்தின் முதல் பாடல் கயா முயா வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

# தென்கொரிய திரைப்பட விழாவில் சிறந்த திரைப்பட விருது பெற்ற "சாட் பூட் த்ரி" தமிழ் திரைப்படம் பற்றிய கொரிய தமிழ்ச் சங்கத்தின் செய்தி குறிப்பு



சென்னை, அக்டோபர் 12 2022: அருணாச்சலம் வைத்யநாதன் அவர்கள் இயக்கி சினேகா, வெங்கட் பிரபு, யோகி பாபு, சிவாங்கி ஆகியோர் நடித்துள்ள "சாட் பூட் த்ரி" தமிழ் திரைப்படத்திற்கு தென் கொரிய தலைநகர் சியோலில் அக்டோபர் 7-8 தேதிகளில் நடந்த செல்லப்பிராணிகள் குறித்த பன்னாட்டு திரைப்பட விழாவில் சிறந்த திரைப்படத்திற்கான விருது வழங்கப்பட்டது. சாட் பூட் த்ரி திரைப்படத்தின் ஒளிப்பதிவு சுதர்சன் ஸ்ரீநிவாசன், கலை ஆருச்சாமி தொகுப்பாளர் பரத் விக்ரமன் இசை பிரபல வீணைக் கலைஞர் ராஜேஷ் வைத்யா திரைக்கதை ஆனந்த் ராகவ் மற்றும் அருணாச்சலம் வைத்யநாதன்.

விருதிற்கான சான்றிதழையும், பணமுடிப்பையும் விழாவில் கலந்துகொண்ட படத்தின் இயக்குனரும் தயாரிப்பாளருமான திரு. அருணாச்சலம் வைத்யநாதன் அவர்கள் பெற்றுக்கொண்டார். நிகழ்வில் கொரிய தமிழ்ச் சங்கத்தின் சார்பில் முனைவர் பு. பாஸ்கரன், செயலாளர், செயற்பாட்டுக்குழு, அவர்கள் கலந்துகொண்டு இயக்குனரை வாழ்த்தி தேவையான உதவி மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்கினார்.

பின்னர் இப்படம் கொரிய மக்களுக்கு திரையிடப்பட்டது. படத்தில் இடம்பெற்ற குழந்தைகள் மற்றும் செல்லப்பிராணிகளுக்குமிடையேயான காட்சிகள் தமக்கு நெருக்கமாக இருந்ததாக கொரிய மக்கள் தெரிவித்தனர். 2016-இம் ஆண்டு முதல் நடக்கும் இந்த பன்னாட்டு திரைப்பட விழாவில் விருதுபெரும் முதல் இந்திய திரைப்படம் "சாட் பூட் த்ரி" என்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்வு பற்றி கருத்து வெளியிட்ட படத்தின் இயக்குனர், நாடு, மொழி உள்ளிட்ட காரணிகள் கடந்து கொரியாவில் கிடைத்திருக்கும் இந்த வரவேற்பு "அன்பிற்கோர் பஞ்சமில்லை" என்ற தன் படத்தின் மூலக்கருவை உள்ளபடியே இயல்பில் உணர்த்தியது தமக்கு பெருமகிழ்ச்சியளிக்கிறது என்றார்.

முன்னதாக கடந்த ஜூலை மாதம் விருதிற்கான விண்ணப்பங்கள் பன்னாட்டு அளவில் பெறப்பட்டு செப்டம்பர் இறுதியில் முடிவுகள் வெளியிடப்பட்டன. புகழ் பெற்ற கொரிய திரைப்பட இயக்குனர்களான சாங் பியோம் கோ, சாங் ஜே லிம், மற்றும் கிவி தோக் லீ ஆகியோர் அடங்கிய குழு விருதிற்கான படங்களை தெரிவு செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தமது கொரிய வருகையின் ஒரு பகுதியாக முனைவர் பாஸ்கரன் அவர்களும் படத்தின் இயக்குனரும் இந்திய தூதரகம் சென்று மாண்புமிகு இந்திய தூதர் அமித் குமார், துணைத்தூதர் சுரீந்தர் பகத், பண்பாட்டுத்துறை செயலாளர் முனைவர் சோனு திரிவேதி ஆகியோரை சந்தித்தனர்.

இச்சந்திப்பில் கொரியாவில் தமிழ் உள்ளிட இந்திய திரைப்படங்களை வணிகரீதியாக கொண்டு செல்வது குறித்து கலந்துரையாடினர். கொரிய மற்றும் தமிழ் திரைப்படங்களுக்கு தமிழ் கொரிய மக்களுக்கிடையே இருக்கும் நல்ல வரவேற்பு, தமிழ் திரைத்துரையின் உலகளாவிய வீச்சு மற்றும் வளர்ச்சி குறித்து இயக்குனர் தூதரிடம் எடுத்துரைத்தார். சாத் பூட் திரி உள்ளிட்ட சிறந்த தமிழ்ப்படைப்புகளை கொரிய மக்களிடம் கொண்டுசெல்ல தம்மாலான அணைத்து உதவிகளையும் செய்வதாக தூதரும் பண்பாட்டுத்துறை செயலாளரும் தெரிவித்தனர்.

இந்திய தூதரகம் சென்று கொரியாவில் தமிழ் உள்ளிட்ட இந்திய திரைப்படங்களை வணிகரீதியில் கொண்டு செல்வது குறித்து உரையாடிய முதல் இந்திய திறப்பிட இயக்குனர் திரு. அருணாச்சலம் வைத்யநாதன் அவர்கள் என்பது குறிப்பிடதக்கது.

படத்தின் இயக்குனருக்கும் இந்திய தூதரக அதிகாரிகளுக்குமிடையேயான சந்திப்பிற்கான ஏற்பாடுகளை கொரிய தமிழ்ச் சங்கத்தின் தலைவர் முனைவர் சு. இராமசுந்தரம், மக்கள் தொடர்பு செயலாளர் சாந்தி பிரின்ஸ், காப்பாளர் முனைவர் பிரபாகரன், செயலாளர் முனைவர் பத்மநாபன், மூத்த உறுப்பினர்கள் முனைவர்கள் சரவணன், சோபா, கோபி மற்றும் திவ்யா ஆகியோர் செய்திருந்தனர்.

மகிழ்வுடன் தாய்நாடு திரும்பிய இயக்குனர் அவர்கள் கொரிய தமிழ்ச் சங்கத்திற்கும், உடன்நின்று உதவி செய்த முனைவர் பாஸ்கரன், கள ஏற்பாடுகளை முன்னின்று செய்த சங்கத்தின் தலைவர் முனைவர். இராமசுந்தரம் உள்ளட்ட சங்கத்தின் ஆளுமைக்குழு உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும் கொரிய தமிழ்ச் சங்கத்திற்கும் தமிழ் திரைத்துறைக்குமான நல்லுறவை ஏற்படுத்தி அதனை விரிவுபடுத்த பங்காற்றும் இயக்குனர் சீனு இராமசாமி மற்றும் இயக்குனர் எம். எஸ். இராஜு, திரு. பாலு மற்றும் தொடர்பாடல் உதவி புரிந்த டோக்கியோ தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு ஹரி ஆகியோருக்கும் இயக்குனர் நன்றி தெரிவித்தார்.

# அறம் எண்டர்டெயின்மெண்ட், ஸ்ரீ ஸ்டூடியோஸ் இணைந்து தயாரித்துள்ள 'காலங்களில் அவள் வசந்தம்' திரைப்படத்தின் டிரைலரை எர்ணாவூர் நாராயணன் வெளியிட்டார்



சென்னை, அக்டோபர் 12 2022: அறம் எண்டர்டெயின்மெண்ட் மற்றும் ஸ்ரீ ஸ்டூடியோஸ் இணைந்து தயாரித்துள்ள கலகலப்பான காதல் கதையான 'காலங்களில் அவள் வசந்தம்' திரைப்படத்தின் டிரெயிலரை சமத்துவ மக்கள் கழக தலைவர் எர்ணாவூர் ஏ நாராயணன் வெளியிட்டார். சமத்துவ மக்கள் கழக மாணவர் அணி மாநில செயலாளர் கார்த்திக் நாராயணன் உள்ளிட்டோர் உடனிருந்தனர். இப்படத்தின் தமிழ்நாடு திரையரங்கு வெளியீட்டு உரிமையை விஸ்கொயர் எண்டர்டெயின்மெண்ட் பெற்றுள்ளது. விஜய் சேதுபதி நடித்த 'மாமனிதன்' மற்றும் 'கடைசி விவசாயி' உள்ளிட்ட படங்களை வெற்றிகரமாக வெளியிட்டுள்ள விஸ்கொயர் எண்டர்டெயின்மெண்ட், 'காலங்களில் அவள் வசந்தம்' திரைப்படத்தை தமிழகமெங்கும் பிரமாண்டமான முறையில் வெளியிட திட்டமிட்டுள்ளது. இப்படத்தின் இசை வெளியீடு விரைவில் நடைபெறும். காதல் மற்றும் நகைச்சுவை கலந்த 'காலங்களில் அவள் வசந்தம்' திரைப்படத்தை இயக்குநர் பிரியாவிடம் உதவி இயக்குநராக பணியாற்றியவரும், திரைப்படங்கள் மற்றும் வெப் சீரிஸுக்கு கதை எழுதி அனுபவம் பெற்றவருமான ராகவ் மிர்தாத் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியுள்ளார். புதுமுகம் கவுசிக் ராம் இப்படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகம் ஆகிறார். டாணாக்காரன் புகழ் அஞ்சலி நாயர் கதாநாயகியாக நடிக்கிறார். ஹெரோஷினி முக்கிய வேடத்தில் நடிக்கிறார். வர்கீஸ் மேத்தியூ, ஆர் ஜே விக்னேஷ், அனிதா சம்பத், ஸ்வாமிநாதன், சவுந்தர்யா, ஜெயா ஸ்வாமிநாதன் மற்றும் பலர் நடித்திருக்கிறார்கள்.

படத்தை பற்றி பேசிய இயக்குநர், "காதல் என்றால் வெறும் ஆண் பெண் கவர்ச்சியா இல்லை அதையும் தாண்டிய ஒரு உணர்வா என்னும் கேள்விக்கு விடை தேடும் ஒரு ஜனரஞ்சகமான ரொமாண்டிக் திரைப்படமே 'காலங்களில் அவள் வசந்தம்'," என்றார்.

'காலங்களில் அவள் வசந்தம்' திரைப்படத்திற்கு கோபி ஜகதீஸ்வரன் ஒளிப்பதிவு செய்ய, அறிமுக இசையமைப்பாளர் ஹரி இசையமைக்க, லியோ ஜான் பால் படத்தொகுப்பு செய்திருக்கிறார். அறம் எண்டர்டெயின்மெண்ட் மற்றும் ஸ்ரீ ஸ்டூடியோஸ் இணைந்து தயாரித்துள்ள 'காலங்களில் அவள் வசந்தம்' திரைப்படத்தை தமிழகமெங்கும் விஸ்கொயர் எண்டர்டெயின்மெண்ட் வெளியிடுகிறது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
புதன்கிழமை, அக்டோபர் 12, 2022

# எச் கே ஜி லிமிடெட்-ல் கட்டுப்படுத்தக்கூடிய பங்கினை ஓப்பன் ஆஃபர் மூலம் வாங்க முற்படும் சர்க்கரை ஆலை தொழிலதிபர் கட்டி



சென்னை, அக்டோபர் 12 2022: கௌரவமிக்க கட்டி குடும்பத்தைச் சேர்ந்த மற்றும் பெல்காம்-ஐ அடித்தளமாகக் கொண்டு தொழில் செயல்பாடுகளை மேற்கொண்டுவரும் சர்க்கரை ஆலை தொழிலதிபரான திரு. லவா ரமேஷ் கட்டி, எச் கே ஜி லிமிடெட் நிறுவனத்தில் 1,36,50,000 சம பங்குகளை வாங்கும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறார். இந்த செயல்நடவடிக்கை நிறைவடைந்த பிறகு எச் கே ஜி லிமிடெட்-ன் நிர்வாக கட்டுப்பாடு திரு. ரமேஷ் கட்டியின் கைவசம் வரும். இந்த திறந்தநிலை ஆஃபர் திட்டமானது 2022 செப்டம்பர் 23ஆம் தேதியன்று தொடங்கி 2022 அக்டோபர் 7ஆம் தேதியன்று முடிவுக்கு வரும். சமீபத்தில், எச் கே ஜி லிமிடெட்-ன் மேலாண்மை இயக்குநராக, 2022 செப்டம்பர் 9ஆம் தேதி முதல் செயல்பாட்டுக்கு வரும் நிலையில் திரு. லவா ரமேஷ் கட்டி நியமனம் செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறிது காலத்திற்கு முன்பு ஸ்ரீ சிவ்சாகர் சுகர் அண்டு அக்ரோ புராடக்ட்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தை விற்பதற்காக நடத்தப்பட்ட ஏலத்தில் எச் கே ஜி லிமிடெட் வெற்றிகரமாக பங்கேற்றியிருந்தது. சர்க்கரை ஆலை, இணை - மின் உற்பத்தி நிலையம், எத்தனால் உற்பத்தி ஆலை, அலுவலக கட்டிடம், சரக்குக்கிடங்கு மற்றும் விருந்தினர் இல்லம் ஆகியவை இந்நிறுவன சொத்துக்களில் உள்ளடங்கியவையாக இருந்தன.

# ஆசிய சாலை பந்தய சாம்பியன்ஷிப் 2022 இன் இறுதிச் சுற்றுக்கு முந்தைய சுற்றுக்காக, ஹோண்டா ரேசிங் இந்தியா அணி மலேசியா வந்தடைந்தது

சென்னை, அக்டோபர் 12 2022: இறுதிச் சுற்றுக்கு முந்தைய சுற்றுக்கு எல்லாமே தயாராக உள்ள நிலையில், ஹோண்டா மோட்டார் சைக்கிள் & ஸ்கூட்டர் இந்தியா (பிவிஷிமி) இன் ஒற்றைய இந்திய பந்தயக் குழு, ஆசிய சாலை பந்தய சாம்பியன்ஷிப் 2022 சுற்று 4 க்காக மலேசியா வந்தடைந்தது.

ஆசியாவின் கடினமான மோட்டார் சைக்கிள் பந்தய சாம்பியன்ஷிப் வகையிலான ஆசிய ப்ரொடக்ஸன் 250சிசி (ஏபி250) இல் 6 நாடுகளைச் சேர்ந்த (இந்தோனேசியா, ஜப்பான், மலேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் வியட்நாம்) 19 ரைடர்களுக்கு எதிராக இந்திய ரைடர்கள் ராஜீவ் சேது மற்றும் செந்தில் குமார் ஜோடி சிறந்த விருதுகளை வெல்வதற்கு போட்டியில் சண்டையிடுவதை இந்த வார இறுதி காணும்.

ஹோண்டா ரேசிங் இந்தியாவிற்கான எ ஆர் ஆர் சி மோதலில் முன்னணியில் இருக்கும் அனுபவம் வாய்ந்த ராஜீவ் சேதுவுக்கு, 2022 ஆம் ஆண்டு, எ ஆர் ஆர் சி இன் 4 வது சீசன் ஆகும். ஸ்போர்ட்ஸ்லேண்ட் எஸ் யு ஜி ஓ இன்டர்நேஷனல் சர்க்யூட்டில் (ஜப்பான்) நடைபெற்ற சாம்பியன்ஷிப்பின் 3வது சுற்று, முதல் நாள் சாம்பியன்ஷிப்பில் ராஜீவ் சேது, எ பி250 வகுப்பில் ஒரு இந்திய ரைடர் செய்த சிறந்த முடிவான 5வது இடத்தைப் பிடித்ததன் மூலம் சரித்திரம் படைத்ததைக் கண்டது. இருப்பினும், 2வது நாளில், ஆரம்ப சுற்றுகளில் ஏற்பட்ட தவறில் இருந்து மீள முடியாமல், பந்தயத்தை 17வது இடத்தில் முடித்தார். அதேசமயம், அவரது அணித்தோழர் செந்தில் குமார், 1வது நாளின் டி என் எஃப் போட்டியில் இருந்து மீண்டெழுந்து, 15வது இடத்தைப் பிடித்து இந்த வகையில் அணிக்கு 1 புள்ளியைப் பெற்றுத் தந்தார்.

ஹோண்டா மோட்டார்சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் இந்தியா வின் பிராண்ட் & கம்யூனிகேஷன் இயக்க அதிகாரி திரு. பிரபு நாகராஜ்,

வரவிருக்கும் 4வது சுற்று குறித்து கூறுகையில், "2022 எ ஆர் ஆர் சி சீசன், அணிக்கு நல்ல பருவமாக இருந்தது. சாம்பியன்ஷிப்பின் இறுதிச் சுற்றுக்கு முந்தய சுற்றுக்கு மலேசியாவுக்குத் திரும்புவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த செபாங் இன்டர்நேஷனல் சர்க்யூட் எங்கள் இளைஞர்களுக்கு நன்கு பரிச்சயமான டிராக் ஆகும், மேலும் இங்கு நல்ல முடிவுகள் கிடைக்கும் என்று நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம். ராஜீவ் மற்றும் செந்தில் இருவரும் சொந்த மண்ணில் நிறைய நேரம் மற்றும் வெளிப்பாட்டைப் பெற்றுள்ளனர், மேலும் அவர்களின் வெளிப்பாடு, அனுபவம் மற்றும் அணியின் ஆதரவுடன் ரைடர்கள் அனைவரும் இந்த பாதையின் சவால்களை மீண்டும் எதிர்கொள்ள தயாராக உள்ளனர். நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம், இந்த வார இறுதியில் சிறந்ததை செய்வதற்கு ஆவலுடன் காத்திருக்கிறோம்." என்றார்.

ராஜீவ் சேது 24 புள்ளிகளுடன் 4வது சுற்றுக்குள் நுழைந்தார். சக வீரர் செந்தில் குமாரும் இதுவரை சீசனில் மொத்தம் 7 புள்ளிகள் பெற்று தனது திறமையை நிரூபித்துள்ளார். இதுவரை, ஹோண்டா ரேசிங் இந்தியா அணி ஒட்டுமொத்த அணி தரவரிசையில் 10வது இடத்தில் உள்ளது.

சாம்பியன்ஷிப்பின் 4வது சுற்றுக்கு ஆவலுடன் காத்திருக்கும் ராஜீவ் சேது, "எ ஆர் ஆர் சியில் சில சிறந்த ரைடர்களுடன் மீண்டும் பந்தயத்தில் இங்கே கலந்துகொள்வது எப்போதுமே ஒரு பெரிய உணர்வாக இருக்கிறது. செபாங் சர்க்யூட் எனக்குப் பரிச்சயமான டிராக்காக இருப்பதால், இந்தச் சுற்றில் நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன். உள்நாட்டுப் பாதையில் இருந்து சமீபத்திய கற்றல் மூலம், முடிந்தவரை அதிகமான புள்ளிகளைப் பெற்று முதல் ஐந்து பட்டியலில் இருப்பதற்கு முயற்சிப்பேன்." என்று கூறினார்.

தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்ட செந்தில் குமார், "கடைசி சுற்று எனது திறனை உண்மையிலேயே சோதித்தது, இறுதியில் எனது அணிக்கு அந்த மதிப்புமிக்க புள்ளியைப் பெற முடிந்தது என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நான்காவது சுற்றுக்கு மீண்டும் ஒருமுறை செபாங்கில் அடியெடுத்து வைப்பதன் நோக்கம், எனது இயந்திரம் மற்றும் செயல்திறன்கள் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும், அதனால் எனது நாட்டிற்கும் அணிக்கும் இன்னும் சிறந்த முடிவுகளை என்னால் வழங்க முடியும்." என்று கூறினார்.

# சர் டேவிட் அட்டன்பரோ தொகுத்து வழங்கும் ஃப்ரோஸன் பிளானட் II-ஐ சோனி பி பி சி எர்த் வெளியிடவுள்ளது




சென்னை, அக்டோபர் 12 2022: சோனி பி பி சி எர்த்-ஆனது அவர்களின் மார்க்கீ பிராப்பர்ட்டி-யான 'ஃப்ரோஸன் பிளானட்' இன் இரண்டாவது சீசனை இந்தியாவில் திரையிடத் தயாராக உள்ளது. பி பி சி அமெரிக்கா, தி ஓபன் யுனிவர்சிட்டி, மிகு வீடியோ, இசட் டி எஃப் மற்றும் பிரான்ஸ் டெலிவிஷன்ஸ் ஆகியவற்றுடன் இணைந்து பி பி சி ஸ்டுடியோ-வின் உலகப் புகழ்பெற்ற நேச்சரல் ஹிஸ்டரி யூனிட்-ஆல் தயாரிக்கப்பட்ட ஃப்ரோஸன் பிளானட் மிமி-ஆனது சர் டேவிட் அட்டன்பரோ-வால் தொகுத்து வழங்கப்படுவதாகும். மிகவும் எதிர்பார்க்கப்படும் ஆறு பாகங்கள் கொண்ட இத்தொடரானது 11 வருட நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் தொலைக்காட்சித் திரைகளுக்கு வருகிறது.

அக்டோபர் 17, 2022 அன்று வெளியிடப்படும் 'ஃப்ரோஸன் பிளானட் மிமி', இப்பகுதிகளில் உள்ள வனவிலங்குகளை ஆராய்வதற்காக, உலகின் மிகக் குளிரான பகுதிகளான, உயரமான மலைகள், உறைந்த பாலைவனங்கள், பனிப்பொழிவான காடுகள் மற்றும் பனிக்கட்டி உறைந்த கடல்கள் போன்ற பகுதிகளுக்கு மக்களை சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லும். மிக நவீன கேமரா தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அல்ட்ரா-ஹை டெஃபினைஷன்-இல் படமாக்கப்பட்டு, வியத்தகு புதிய நடத்தைகள், அந்தரங்கக் கதைகள் மற்றும் முதன்முறையாக கேமராவில் படம்பிடிக்கப்பட்ட பரவசமூட்டும் இயற்கைக் காட்சிகள் ஆகியவற்றுடன், ஆறு பாகங்களைக் கொண்ட இத்தொடரானது நமது கிரகத்தின் உறைந்த நிலப்பகுதிகளின் அதிசயத்தை முன்னெப்போதும் இல்லாத வகையில் அனுபவிக்கும் வாய்ப்பாகும்.

# சென்னையில் குடியிருப்பு விலைகள், காலாண்டுக்கு காலாண்டு 2.1% அதிகரித்துள்ளது மற்றும் தேவை 9.2% குறைந்துள்ளது என்று மேஜிக்பிரிக்ஸ்ப்ராப் இன்டெக்ஸ் மூன்றாம் காலாண்டு அறிக்கை , 2022 வெளிப்படுத்துகிறது

சென்னை, அக்டோபர் 12 2022: சென்னையில், குடியிருப்பு ரியல் எஸ்டேட்டுக்கான தேவை (தேடல்கள்) காலாண்டுக்கு காலாண்டு 9.2% குறைந்துள்ளது. இதற்கிடையில், வழங்கல் (பட்டியல்கள்) காலாண்டுக்கு காலாண்டு 5.2% குறைந்துள்ளது மற்றும் நகர அளவில் சராசரி சொத்து விகிதம் காலாண்டுக்கு காலாண்டு 2.1% வளர்ச்சியை உறுதிசெய்ததை மேஜிக்பிரிக்ஸ் இன் ப்ராப்இன்டெக்ஸ் மூன்றாம் காலாண்டு அறிக்கை , 2022 கண்டறிந்தது. வரவிருக்கும் பண்டிகை காலாண்டில் ஒரு சுழற்சி வீழ்ச்சி மற்றும் தேவை மீண்டும் எழும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இந்த அறிக்கை கணித்துள்ளது.

சென்னையின் முக்கிய ஐ.டி காரிடார்கள் மற்றும் வேலைவாய்ப்பு மையங்கள் ஓஎம்ஆர் மற்றும் ஈ சி ஆர் ஆகியவற்றில் இருப்பதால், குடியிருப்புகளின் தேவை கடலோரப் பகுதிகளை நோக்கி தொடர்ந்து நகர்கிறது. பொது போக்குவரத்து மற்றும் கடற்கரைகளுக்கு அருகாமை போன்ற வசதிகளுக்கு எளிதாக அணுகுவதும் இந்த இடங்களுக்கு ஒரு அனுகூலத்தை அளிக்கிறது.

தேவை மற்றும் வழங்கல் ஆகிய இரண்டிலும், சதுர அடிக்கு 5,000ரூ10,000 ரூபாய் பிரிவில் உள்ள நடுத்தர பிரிவு சொத்துக்கள் மலிவு பிரிவை விட அதிகமாக விரும்பப்படுகின்றன. 2 பி எச் கே பிரிவுகள் 43% மற்றும் 50%

முறையே தேவை மற்றும் விநியோகப் பங்குடன் குடியிருப்பு சந்தையில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றன.

மேஜிக் பிரிக்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சுதிர்பாய் போக்கு குறித்து விவரிக்கையில், "இந்தியா முழுவதும், கலாச்சார நுட்பமான வேறுபாடுகள் மற்றும் மழைக்காலம் காரணமாக குடியிருப்பு தேவை மற்றும் விநியோகத்தில் சுழற்சி சரிவு ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், வரவிருக்கும் பண்டிகை மாதங்கள் ரியல் எஸ்டேட் முதலீடுகளைச் செய்வதற்கு சாதகமானதாகக் கருதப்படுகிறது, மேலும் தேவை மற்றும் விநியோகம் விரைவாக மீட்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். லாபகரமான சலுகைகள் மற்றும் டீல்கள் மூலம் சொத்துக்களை அணுக வசதியாக்குவதற்கு, எங்களது ட்ரீம் ஹோம் ஃபெஸ்டிவலின் (டி எச் எஃப்) இந்த 6வது பதிப்பு, அக்டோபர் 1, 2022 அன்று தொடங்கப்பட்டது, மேலும் இந்த ஆண்டும் முந்தைய பதிப்புகளின் வெற்றியைப் பிரதிபலிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்." என்று கூறினார்.

முக்கிய ஐ.டி காரிடார்கள் மற்றும் முக்கிய வேலைவாய்ப்பு மையங்களான ஈசிஆர் (5.5%), மற்றும் ஓஎம்ஆர் (1.9%) போன்ற இடங்களில் சராசரி சொத்து விகிதங்கள் காலாண்டுக்கு காலாண்டு வளர்ச்சியைக் கண்டதையும் இந்த அறிக்கை அடையாளம் கண்டுள்ளது. மத்தியப் பிரிவு சொத்துக்களுக்கு, சோழிங்கநல்லூர் (5.1%) மற்றும் மேடவாக்கம் (4.7%) போன்ற பகுதிகளும் ஓஎம்ஆர் மற்றும் ஈசிஆர் க்கு அருகாமையில் இருப்பதால் காலாண்டுக்கு காலாண்டு வளர்ச்சியை வெளிப்படுத்தின.

பூந்தமல்லி (4.2%), பெருங்களத்தூர் (3.8%), அம்பத்தூர் (3.5%), மற்றும் ஐயப்பன்தாங்கல் (1.5%) போன்ற மக்கள் அடர்த்தியான இடங்கள், அவற்றின் சராசரி சொத்து விகிதங்களில் காலாண்டுக்கு காலாண்டு சரிவை வெளிப்படுத்தின.

விலைகள் அதிகரிப்பதை வாங்குபவர்கள் அறிந்திருப்பதாகவும், எனவே அவர்கள் மேலும் உயரும் முன் முதலீடு செய்வார்கள் என்றும் அறிக்கை மேலும் கண்டறிகிறது. இது சென்னையின் குடியிருப்பு பிரிவின் முன்னோக்கிய பாதையையும் கணித்துள்ளது.

# மரிகோவின் பாராசூட் கல்பவிருக்ஷா அறக்கட்டளை 2026 நிதியாண்டிற்குள் 1000 கோடி ரூபாய் விவசாய வருமானத்தை உருவாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளது, விவசாயிகளின் வளர்ப்பு உணர்வைக் கொண்டாடும் வகையில் ஒரு விளம்பரப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது

சென்னை, அக்டோபர் 12 2022: மரிகோவின் பாராசூட் கல்பவிருக்ஷா அறக்கட்டளை (பி கே எஃப்) 2026 நிதியாண்டில் 1000 கோடி ரூபாய் விவசாய வருமானத்தை உருவாக்குவதன் மூலம் 1 லட்சம் விவசாயிகளை அடையும் நோக்கத்தை உறுதிப்படுத்த ஒரு புதிய விளம்பரப் பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது. இந்த விளம்பரமானது இந்தியாவின் விவசாய சமூகங்களின் வளர்ச்சி மற்றும் வளர்ப்பின் உள்ளார்ந்த உணர்வைக் கொண்டாடுவதன் மூலம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறது. இந்திய விவசாயிகளின் உத்வேகம் தரும் கதைகளை நாட்டு மக்களுக்கு முன்வைக்க மரிகோ விரும்புகிறது.

விளம்பரத்தின் ஒரு பகுதியாக, பாராசூட் கல்பவிருக்□ஷா அறக்கட்டளை நமது விவசாயிகளின் செறிவூட்டும் மனப்பான்மையைக் கொண்டாடுவதற்கும் அவர்களின் தொடர் முயற்சிகளைப் பாராட்டுவதற்கும் ஒரு விளம்பரப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது. இந்திய விவசாய சமூகத்துடனான மரிகோவின் தொடர்பையும், விவசாயிகளின் விளைச்சலை மேம்படுத்த பி கே எஃப் எவ்வாறு உதவுகிறது என்பதையும் இது விவரிக்கிறது. விளம்பரத்தின் மையக் கருத்து, வளர்ந்து வரும் விவசாயிகளை முற்போக்கான விவசாய முறைகளைக் கொண்டு ஆதரிப்பதும், அவர்களுக்கு உயர்தர வாழ்க்கைத் தரத்தை வழங்குவதும் ஆகும். எனவே, இந்த படம் விவசாயிகளை பி கே எஃப் உடன் இலவச எண் மூலம் இணைக்க அழைக்கிறது.

பி கே எஃப் வெற்றிகரமாக பிராந்தியங்கள் முழுவதும் பல பயிற்சி அமர்வுகளை முன்னெடுத்தது, விஞ்ஞான மற்றும் நவீன நடைமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு அறிவூட்டுகிறது மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுடன் விவசாய பாரம்பரியத்தை மேம்படுத்துகிறது. மரிகோ, பி கே எஃப் மூலம் இந்தத் திட்டத்தை வேகமாக விரிவுபடுத்துவதற்காக விவசாய தொழில்முனைவோரைப் பயன்படுத்துதல் போன்ற பிற மாதிரிகளில் வேலை செய்து வருகிறது. 'பாராசூட் கல்பவிருக்□ஷா அறக்கட்டளை', விவசாயிகளின் வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரத்தில் நேர்மறையான தாக்கத்தை உருவாக்க பாடுபடுகிறது. தற்போது கேரளா மற்றும் தமிழ்நாட்டை மையமாகக் கொண்டு, விவசாயிகள் தங்கள் உற்பத்தித்திறனை அதிகரிக்க 24,135 டிஜிட்டல் முறையில் செயல்படுத்தப்பட்ட பயிற்சிகளை பி கே எஃப் நடத்தியது.

பாராசூட் கல்பவிருக்□ஷா அறக்கட்டளையின் வெற்றியைப் பற்றி பேசிய மரிகோ லிமிடெட், தலைமை சட்ட அதிகாரி & குழு பொது ஆலோசகர் மற்றும் சி எஸ் ஆர் கமிட்டியின் செயலாளர், திரு. அமித் பாசின் அவர்கள், "கல்வி, திறன் மேம்பாடு மற்றும் புதுமை மூலம் சமூகத்தை வளர்ப்பதன் மூலமும் அதிகாரமளிப்பதன் மூலமும் சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த நாங்கள் உறுதியாக உள்ளோம் மற்றும் நிலைத்தன்மை எப்போதும் மரிகோவின் நெறிமுறையின் பிரிக்க முடியாத பகுதியாகும். இந்த விளம்பரத்தின் மூலம், எங்கள் விவசாய சமூகத்தின் இடைவிடாத முயற்சிகளை முன்னிலைப்படுத்துவதையும், நுகர்வோர் அவர்களுடன் நெருங்கிய தொடர்பை உருவாக்க உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம். கடந்த சில ஆண்டுகளில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியதன் மூலம், 2026ஆம் ஆண்டுக்குள் 1 லட்சம் விவசாயிகளின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த இலக்கு வைத்துள்ளோம்." என்று கூறினார்

நீடித்த மாற்றத்தை ஏற்படுத்த உறுதிபூண்டுள்ள மரிகோ லிமிடெட், பாராசூட் கல்பவிருக்□ஷா அறக்கட்டளையை 2017 இல் அறிமுகப்படுத்தியது. அதன் தொடக்கத்தில் இருந்து, பி கே எஃப் 2.55 லட்சம் ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ளது மற்றும் 62,900 விவசாயிகளை திட்டத்தில் சேர்த்துள்ளது. இந்த அறக்கட்டளை விவசாயிகளுக்கு முறையான பயிற்சி மற்றும் நிலையான விவசாய முறைகள் பற்றிய விழிப்புணர்வை வழங்குவதன் மூலம் அவர்களின் நலனுக்காக செயல்பட விரும்புகிறது. இந்தத் திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தித் திறனை 15% ஆண்டுக்கு உயர்த்தியுள்ளது. எஃப் ஒய்25 க்குள், 4 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்களை உள்ளடக்கி, 1 லட்சத்துக்கும் அதிகமான விவசாயிகளைச் சேர்த்து, உற்பத்தித்திறனில் 16% அதிகரிப்பை வழங்க மரிகோ இலக்கு கொண்டுள்ளது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# சாய் சில்க்ஸ் (கலாமந்திர்), அதன் 50வது விற்பனையகத்தைத் துவங்கியது

சென்னை, அக்டோபர் 12 2022: 2019, 2020 மற்றும் 2021 நிதியாண்டுகளில், வரிக்குப் பிந்தைய வருவாய் மற்றும் லாபத்தின் அடிப்படையில், தென்னிந்தியாவில் பாரம்பரிய ஆடைகள், குறிப்பாக சேலைகள் முன்னணி சில்லறை விற்பனையாளர்களில் ஒன்றான (டெக்னோபாக் அறிக்கையின்படி), சாய் சில்க்ஸ் (கலாமந்திர்) லிமிடெட் (சாய் சில்க்ஸ் அல்லது எஸ் எஸ் கே எல்), இன்று தமிழ்நாட்டின் சென்னையில் அவர்களின் முக்கிய 50 வது விற்பனையகத்தை திறந்தது. ‘வரமஹாலக்ஷ்மி சில்க்ஸ்’ என்ற பெயரில் இயங்கி வருகிற இந்த புதிய எஸ் எஸ் கே எல் ஸ்டோர்,4000 சதுர அடிக்கு மேல் இரண்டு தளங்கள் முழுவதிலும் பரந்து விரிந்து சென்னை அண்ணாநகர் 3வது பிரதான சாலையில் அமைந்துள்ளது.



இந்த புதிய வரமஹாலக்ஷ்மி ஸ்டோர் தமிழ்நாட்டின் மூன்றாவது விற்பனையகம் ஆகும் - மற்ற இரண்டு சென்னை மயிலாப்பூர் மற்றும் காஞ்சிபுரம் காந்தி சாலையில் அமைந்துள்ளது. காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள் போன்ற கைத்தறிகளில் முக்கிய கவனம் செலுத்தி, பனாரசி, பட்டோலா, கோட்டா, காஞ்சிபுரம், பைத்தானி, ஆர்கன்சா, குப்படம் போன்ற பல்வேறு வகையான புடவைகள் உட்பட, பிரீமியம் தயாரிப்பு வழங்கல்களை இது கொண்டுள்ளது. மதிப்புமிக்க பேஷன் பொருட்கள் உட்பட, பல்வேறு வகையான அல்ட்ரா-பிரீமியம் மற்றும் பிரீமியம் புடவைகள் மற்றும் பாரம்பரிய உடைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான தயாரிப்புகளை வழங்குவதன் மூலம், எஸ் எஸ் கே எல் இன் விற்பனையகங்கள், இந்தியாவின் துடிப்பான கலாச்சாரம், மரபுகள் மற்றும் பாரம்பரியத்தை பரப்புவதில் கவனம் செலுத்துகின்றன. திருமணம் மற்றும் சிறப்பு

நிகழ்ச்சிகளில் அணியக்கூடிய ஆடைகள், மற்றவற்றுக்கிடையில், பாரம்பரிய பட்டுப் புடவைகள் மற்றும் கைத்தறிகளின் இலக்குகள் ஆகும். வரமஹாலக்ஷ்மி புடவைகள் சில்லறை விற்பனையில் தோராயமாக ரூ. 4,000 முதல் ரூ.250,000 வரை உள்ளன.

சாய் சில்க்ஸ் (கலாமந்திர்) நிர்வாக இயக்குநர் திரு.நாககனக துர்க பிரசாத் சாலவடி கூறுகையில், “தமிழ்நாடு எங்களுக்கு எப்போதும் முக்கியமான சந்தையாக இருந்து வருகிறது. சாய் சில்க்ஸ் இந்தியா முழுவதும் 50 ஸ்டோர்களைக் கொண்ட ஒரு முக்கிய மைல்கல்லைக் கடந்த நிலையுடன், மாநிலத்தில் எங்கள் மூன்றாவது ஸ்டோர் ஒத்திசைந்திருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த வரமஹாலக்ஷ்மி ஃபார்மெட் ஸ்டோர், எங்கள் முழு அளவிலான பிரீமியம் பட்டுப் புடவைகள் மற்றும் காஞ்சிபுரம் புடவைகளை வழங்குகிறது. மூலோபாய ரீதியாக ஒரு பிரதான பகுதியில் அமைந்துள்ள இந்த புதிய விற்பனையகம், எங்கள் திரள் அடிப்படையிலான அணுகுமுறையின் ஒரு பகுதியாகும். "என்று கூறினார்.

திரு. சாலவாடி மேலும் கூறினார், “எங்கள் வரமஹாலக்ஷ்மி விற்பனையகங்கள், தனித்துவமான அனுபவத்தையும் வாடிக்கையாளர் சேவையையும் வழங்குவதாக நாங்கள் நம்புகிறோம், இது எங்கள் சரக்கு மற்றும் நாங்கள் வழங்கும் பல்வேறு எஸ் கே யு களுடன் இணைந்து, வளர்ந்து வரும் வாடிக்கையாளர்கள் தளத்தை ஈர்க்கவும் தக்கவைக்கவும் உதவுகிறது. இங்கிருந்து, தென்னிந்தியா முழுவதும் 25 கூடுதல் விற்பனையகங்களைத் திறக்க உத்தேசித்துள்ளோம் மற்றும் அடுத்த இரண்டு நிதியாண்டுகளின் இடையில் இவை திட்டமிடப்பட்டுள்ளன."

இந்த வரமஹாலக்ஷ்மி ரீடெய்ல் பிராண்ட் வடிவம் 2011 ஆம் ஆண்டு பெங்களூரு சிக்பெட்டில் முதல் ஸ்டோர் திறப்புடன் நிறுவப்பட்டது, மேலும் பெங்களூரு, ஹைதராபாத், சென்னை, விஜயவாடா, நெல்லூர் போன்ற நகரங்களில் மே 31, 2022 இல் மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

வரமஹாலக்ஷ்மி விற்பனையகங்கள் மிகவும் பாரம்பரியமாக அலங்கரிக்கப்பட்டுள்ளன மற்றும் காஞ்சிபுரம் கலாச்சாரத்தில் பிராண்டின் தோற்றத்தை பிரதிபலிக்கின்றன. இது ஒரு பிராண்டாக உருவாக்கப்பட்டு, கைத்தறி புடவை வியாபாரத்தை மீண்டும் புதுப்பித்து, காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள் மற்றும் பிற கைத்தறி மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கான புடவைகளை ஒரே கூரையின் கீழ் வழங்குகிறது.

சாய் சில்க்ஸ் ஆனது, கலாமந்திர், வரமஹாலக்ஷ்மி சில்க்ஸ், மந்திர் மற்றும் கேஎல்எம் ஃபேஷன் மால் உள்ளிட்ட நான்கு ஸ்டோர் வடிவங்களைக் கொண்டு, பிரீமியம் பாரம்பரிய ஃபேஷன், நடுத்தர வருமானத்திற்கான பாரம்பரிய பேஷன் மற்றும் மதிப்பு-பேஷன் ஆகியவை அடங்கிய பல்வேறு தயாரிப்புகளுடன், வெவ்வேறு விலைப் புள்ளிகளில், சந்தையின் பல்வேறு பிரிவுகளுக்கு வழங்கி, அதன் மூலம் அனைத்து சந்தைப் பிரிவுகளிலும் உள்ள வாடிக்கையாளர்களை பூர்த்திசெய்கிறது.

# ஆக்சிஸ் மியூச்சுவல் ஃபண்ட் ,‘ஆக்சிஸ் நாஸ்டாக் 100 ஃபண்ட் ஆஃப் ஃபண்ட்’ ஐ அறிமுகப்படுத்துகிறது

சென்னை, அக்டோபர் 12 2022: இந்தியாவின் முன்னணி சொத்து மேலாண்மை நிறுவனங்களில் ஒன்றான ஆக்சிஸ் மியூச்சுவல் ஃபண்ட், ஆக்சிஸ் நாஸ்டாக் 100 ஃபண்ட் ஆஃப் ஃபண்ட் (நாஸ்டாக் 100 டி ஆர் ஐ யில் மையமாகக்கொண்ட பங்குச்சந்தை வர்த்தக நிதிகளின் யூனிட்களில் முதலீடு செய்யும் ஓபன் எண்டெட் ஃபண்ட் ஆஃப் ஃபண்ட் ஸ்கீம்) தொடங்குவதாக அறிவித்தது. இந்த நிதியானது , பங்குச்சந்தை வர்த்தக நிதிகளை முதலீடு செய்வதன் மூலம் நாஸ்டாக் 100 டி ஆர் ஐ யின் செயல்திறனைப் பிரதிபலிப்பதில் கவனம் செலுத்துகிறது, கண்காணிப்புப் பிழைகளுக்கு உட்பட்டு, இதன் முதன்மை நோக்கமாக நாஸ்டாக் 100 டி ஆர் ஐ யின் செயல்திறனைக் கண்காணிப்பதாக /எதிரொலிப்பதாக இருக்கும். ஒரு விண்ணப்பத்திற்கு குறைந்தபட்ச விண்ணப்பத் தொகை 500 ரூபாய் ஆகவும் அதற்குமேல் இந்திய ரூபாய் 1/- இன் மடங்குகளாகவும் இருக்கும். ஹிதேஷ் தாஸ் (நிதி மேலாளர் - ஓவர்சீஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ்) ஆக்ஸிஸ் நாஸ்டாக் 100 நிதியின் நிதியை வழிநடத்துவதால், இந்த நிதியானது நாஸ்டாக் 100 டி ஆர் ஐ (ரூ) க்கு எதிராக தரப்படுத்தப்படும்.

ஆக்சிஸ் ஏஎம்சியின் எம்டி & சிஇஓ சந்திரேஷ் நிகம் கூறுகையில், “முதலீட்டாளர்கள் முதிர்ச்சியடைந்து, தங்கள் செல்வத்தை உருவாக்கும் பயணத்தில் தீவிர ஆர்வம் காட்டுவதால், சொத்து ஒதுக்கீட்டின் முன்னுதாரணங்களும் மாறுகின்றன. உலகளாவிய எல்லைகள் மெதுவாக மங்குவதால், முதலீட்டாளர்கள் சில சர்வதேச விரிவாக்கத்திற்கு அணுகலைப் பெற ஆர்வமாக உள்ளனர், இது முன்னர் அவ்வளவு தடையின்றி சாத்தியமில்லாமல் இருந்தது. ஆக்ஸிஸ் நாஸ்டாக்100 ஃபண்ட் ஆஃப் ஃபண்ட் மூலம், முதலீட்டாளர்களுக்கு உலகளாவிய வெளிப்பாட்டைப் பெறுவதற்கான வாய்ப்பை நாங்கள் வழங்குகிறோம். இந்த நிதியத்தின் தத்துவம் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு முதலீட்டாளர்களுக்கு மதிப்புமிக்க கூடுதலாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்." என்று கூறினார்.

என் எஃப் ஓ ஆனது அக்டோபர் 7 , 2022 அன்று சந்தாவிற்குத் திறக்கப்பட்டு அக்டோபர் 2022 21 , அன்று முடிவுறுகிறது.

# ஐசிஐசிஐ வங்கி உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து பணம் பெறுவதற்கான எளிய ஆன்லைன் தீர்வாக ‘ஸ்மார்ட் வயர்’ சேவையை அறிமுகப்படுத்துகிறது

சென்னை, அக்டோபர் 12 2022: ஸ்விப்ட் அமைப்பு அடிப்படையில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து வேகமாகவும் தடைகள் ஏதுமற்ற முறையிலும் பணம் பெற வாடிக்கையாளர்களுக்கு உதவும் வகையிலான ஆன்லைன் தீர்வை அறிமுகப்படுத்துவது குறித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது ஐசிஐசிஐ வங்கி. ‘ஸ்மார்ட் வயர்’ (ஷினீணீகூஷீ மீகீ வீ கூஷீ மீ) என்று பெயரிடப்பட்ட இவ்வசதியின் கீழ் வெளிநாடுவாழ் இந்தியர்கள் மற்றும் உள்நாட்டு வாடிக்கையாளர்கள் அனைவரும் காகிதமற்ற ஆன்லைன் முறையில் பணம் அனுப்புதல் பரிவர்த்தனையை மேற்கொள்ளலாம். வெளிநாட்டிலிருந்தும் உள்நாட்டு அளவிலும் பணம் அனுப்பும் செயல்முறையை வேகமாக மேற்கொள்ள உதவும் இம்முறையை நம் நாட்டில் முதன்முறையாக அறிமுகப்படுத்தும் வங்கியாக விளங்குகிறது ஐசிஐசிஐ வங்கி.

வங்கித் துறையில் முதன்முறையாக கொண்டுவரப்படும் இவ்வசதியானது வாடிக்கையாளர் தனது ’வயர் ட்ரான்ஸ்பர்’ கோரிக்கையைத் தொடங்கவும், ஆன்லைனில் தனது உறுதிப்பாட்டை / ஆவணங்களை சமர்ப்பிக்கவும், முன்கூட்டியே பரிமாற்ற விகிதங்களைத் தடுக்கவும், பரிமாற்றத்தின் நிலையை அறியவும் உதவுகிறது. இவ்வசதி மூலமாக வாடிக்கையாளர் தொடர்பான துல்லியமான தகவல்கள், வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்புவதன் நோக்கம் மற்றும் உறுதிப்பாடு ஆகியன சேகரிக்கப்பட்டு, தேவைப்படும் பட்சத்தில் அனுப்புநருக்கு உடனடியாக பகிர்ந்தளிக்கப்படும். இது தடையற்ற முறையில் பணம் அனுப்ப வகை செய்கிறது; குடும்ப பராமரிப்பு மற்றும் சேமிப்புகள், தனிப்பட்ட பரிசு / நிதி உதவி, என்ஆர்இ / என்ஆர்ஓ திருப்பு அனுப்புதல், ஊதியம், வர்த்தக மற்றும் மேலாண்மை ஆலோசனை உள்ளிட்ட வெவ்வேறு காரணங்களுக்காக பணம் அனுப்ப இவ்வசதியைப் பயன்படுத்தும்போது பயனரின் நேரம் மிச்சமாகிறது.

இம்முயற்சி குறித்து ஐசிஐசிஐ வங்கியின் சர்வதேச வங்கி குழும தலைவர் திரு.ஸ்ரீராம் ஹெச்.ஐயர் பேசுகையில், “ஐசிஐசிஐ வங்கியில் மிக உயரிய பாதுகாப்போடு அதிவேகமான முறையில் புதுமையான திட்டங்களையும் சேவைகளையும் செயல்படுத்தி வாடிக்கையாளர்களின் வசதிகளை விரிவுபடுத்துவதில் உறுதி கொண்டுள்ளோம். வங்கித்துறையில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்படும் இந்த ’ஸ்மார்ட் வயர்’ வசதி வெளிநாடு வாழ் இந்தியர்களும் நாட்டு குடிமக்களும் அதிவேகம் மற்றும் சிறப்பான அனுபவம் எனும் தனித்துவத்துடன் நாட்டின் எல்லையைக் கடந்து பண பரிமாற்றத்தை மேற்கொள்ள வைக்கிறது. இந்த புதிய வசதியானது எங்களது வாடிக்கையாளர்கள் உடனடியாக, தடைகள் ஏதுமற்று பணப் பரிமாற்றங்களை மேற்கொள்ள உதவுமென்று நம்புகிறோம்” எனத் தெரிவித்தார்.

# இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் லாஜிஸ்டிக் நிறுவனத்தின் 15ஆவது பட்டமளிப்பு விழா

சென்னை, அக்டோபர் 12 2022: ஆயிரக்கணக்கான முதுகலை பட்டதாரிகளுக்கு பயிற்சி அளித்த இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் லாஜிஸ்டிக் சென்னையில் செயல்பட்டு வரும் இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் லாஜிஸ்டிக் எனும் கல்வி நிறுவனத்தின் 15 வது பட்டமளிப்பு விழா வழக்கமான உற்சாகத்துடன் சிறப்பாக நடைபெற்றது. சென்னை, துபாய் மற்றும் கொச்சியில் இயங்கி வரும் இந்தியன் இன்ஸ்ட்யூட் ஆஃப் லாஜிஸ்டிக் நிறுவனம், லாஜிஸ்டிக் எனப்படும் சரக்குகள் மற்றும் தளவாடங்களை கையாளும் பிரிவில் பெற்றிருக்கும் அனுபவத்தைக் கொண்டு இத்துறையில் முதுகலை பட்டதாரிகளுக்கான பயிற்சியை வழங்கி வருகிறது. எம்பிஏ (லாஜிஸ்டிக் மற்றும் ஷிப்பிங்) மற்றும் குளோபல் எம்பிஏ (லாஜிஸ்டிக் மற்றும் சப்ளை செயின்) என இரண்டு முதுகலை பட்டப்படிப்புகளுக்கு கடந்த 15 ஆண்டு காலமாக சான்றிதழுடன் கூடிய பயிற்சியை இந்நிறுவனம் அளித்து வருகிறது.



தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஆண்டுதோறும் பட்டமளிப்பு வழங்கும் விழாவும் நடைபெறுகிறது. இந்த ஆண்டும் சென்னையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் எம் எஸ் சி எனும் நிறுவனத்தின் மூத்த துணை தலைவரான திரு என். கிருஷ்ணகுமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் லாஜிஸ்டிக் நிறுவனத்தின் தலைவரான கேப்டன் வி. ஜே. புஷ்பகுமார், இந்நிறுவனத்தின் பொது மேலாளரான ரம்யா பி. ராஜ் ஆகியோர் வருகை தந்திருந்த சிறப்பு விருந்தினர்களையும், மாணவர்களையும் வரவேற்றனர்.

அதன் போது பேசிய வி ஜே புஷ்பகுமார், " இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் லாஜிஸ்டிக் நிறுவனத்தின் மூலம் கடந்த 15 ஆண்டுகளில் 16 ஆயிரம் மாணவர்களுக்கு பயிற்சி அளித்திருக்கிறோம். அவர்கள் தற்போது தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் தங்களுடைய பணி சார்ந்த அனுபவங்களை வழங்கி, சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள்." என்றார்.

சிறப்பு விருந்தினரான என். கிருஷ்ணகுமார் பேசுகையில், " இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் லாஜிஸ்டிக் நிறுவனம், ஒவ்வொரு ஆண்டும் இந்த துறையில் சிறப்பான திறமைசாலிகளை உருவாக்குகிறது. இதன் மூலமாக வணிகத்துறையில் சர்வதேச கூட்டாளிகளுடன் எளிதாக வர்த்தகம் செய்ய முடிகிறது. சர்வதேச அளவில் சரக்குகள் மற்றும் தளவாடங்களின் போக்குவரத்தை ஒரே புள்ளியில் கட்டமைக்கும் பணிகளில் இந்நிறுவனத்தின் மாணவர்களின் பங்களிப்பு சிறப்பானது. இங்கிருந்து உருவாகும் மாணவர்கள் திறமைசாலிகளாக மட்டுமல்லாமல், அவர்களுடைய அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பினால் தலைவர்களாகவும் உருவாகக்கூடும். இவர்களின் தீர்க்கமான முடிவுகளினால், இந்தியாவிற்கு சர்வதேச ஒத்துழைப்பு அதிகமாக கிடைப்பதற்கான சாத்தியம் ஏற்பட்டிருக்கிறது. இந்நிறுவனத்தில் பயின்ற, பயிற்சி பெற்ற மாணவர்கள் முன்வைக்கும் ஆலோசனைகள், சிறந்த வாய்ப்பை எதிர்காலத்தில் உருவாக்கும் என்பது உண்மை" என்றார்.

இந்த பட்டமளிப்பு விழாவில் தமிழக பாரதிய ஜனதா கட்சியின் ஓ எல் சி பிரிவை சார்ந்த தலைவர் ஸ்ரீ கே. பி. ஜெயக்குமார், யூனிகார்ன் மரிட்டைம் எனும் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும், சென்ஸா அமைப்பின் முன்னாள் தலைவருமான டாக்டர் அருள் ஜோசப், இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் லாஜிஸ்டிக் நிறுவனத்தின் பேராசிரியர்கள் மதனகோபால் மற்றும் பென்னி ஜான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனிடையே லாஜிஸ்டிக் நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா என்றாலும், பல்கலைக்கழகங்களில் பட்டமளிப்பு விழாவின் போது நடைபெறும் அனைத்து கோலாகலமான வரவேற்பு, மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் ஆகியவையும் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.






காந்தி ஜெயந்தி ஸ்வச்சதா (தூய்மை) சிறப்பு பிரச்சாரம் 2.0 இந்தியன் ஓவர்சீஸ் வங்கியால் நடத்தப்பட்டது. வங்கியின் சென்னை மைய அலுவலக வளாகத்தில் செயல் இயக்குநர் செல்வி எஸ் ஸ்ரீமதி மற்றும் சிவிஓ ஸ்ரீ ஆர் பாலசுப்ரமணியன் ஆகியோர் தலைமையில் தூய்மை இயக்கம் நடைபெற்றது. அனைத்து ஜிஎம்கள், டிஜிஎம்கள், ஏஜிஎம்கள் மற்றும் பிற வங்கி அதிகாரிகள் முழு மனதுடன் முழு ஆர்வத்துடனும் ஆர்வத்துடனும் தூய்மை இயக்கத்தில் பங்கேற்றனர். சென்னையில், மெரினா கடற்கரையில் உள்ள லைட் ஹவுஸில், சென்னையின் மண்டல மேலாளர்கள் - I & II அவர்களின் பணியாளர்களுடன் இணைந்து தூய்மை இயக்கம் நடத்தப்பட்டது.